

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று(16.8.2025) முகாம் அலுவலகத்தில், கழக தீர்மானக் குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன் அவர்கள் மனைவியுடன் சந்தித்து, தனது இரட்டை பேரக் குழந்தைகளுக்கு பெயர் சூட்டிட வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க, முதலமைச்சர் அவர்கள் ஆண் குழந்தைக்கு ”அகம் என்றும், பெண் குழந்தைக்கு “நற்றிணை” என்றும் பெயர் சூட்டினார். உடன் அவரது மகள் டாக்டர் கோமல் தமிழ்தாசன் மற்றும் மருமகன் டாக்டர் தணிகை அரசு ஆகியோர் உள்ளார்கள்.



சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (15.08.2025) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் சென்னை அடையாறு, அனந்தபத்மநாப சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

### நெல்லை புதிய பன்னோக்கு உயர்சிறப்பு அரசு மருத்துவமனைக்கு

# முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரைச் சூட்டவேண்டும்!

## மாவட்ட ஆட்சியரிடம் மாநகரப் பொறுப்பாளர் சு. சுப்பிரமணியன் கோரிக்கை மனு!

நெல்லை.ஆக.17-

நெல்லை புதிய பல்நோக்கு உயர் சிறப்பு அரசு மருத்துவமனைக்கு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெயரைச் சூட்டுவதற்கு மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமாரி டம் நெல்லை மேற்கு மாநகர கழக பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் கோரிக்கை மனுவை நேரில் வழங்கினார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:-

தமிழ்நாடு திராவிட மாடல் முதல்வர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தென் மாவட்ட மக்களின் மருத்துவ சேவையை பூர்த்தி செய்ய சுமார் 70 கோடி மதிப்பீட்டில் 2500 க்கும் மேற்பட்ட படுக்கை வசதி கொண்ட நெல்லை புதிய பல்நோக்கு உயர் சிறப்பு அரசு மருத்துவமனை மக்கள் பயன்பாட்டிற்கு திறக்கப்பட்டது.மேற்படி மருத்துவமனையில் தினமும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு பொது மருத்துவம், அறுவை சிகிச்சை,நுரையீரல், காது, மூக்கு, தொண்டை, மகப்பேறு, ஊனமுற்றோர் மருத்துவம்,சிறுநீரகவியல் உள்ளிட்ட பல்வேறு சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகிறது.

நெல்லை புதிய பல்நோக்கு உயர் சிறப்பு அரசு மருத்துவமனைக்கு தமிழ்நாட்டு மக்களுக்காக பல்வேறு மருத்துவ, சுகாதார உள்கட்டமைப்பை ஏற்படுத்தி, சுகாதாரம் கல்வி உள் கட்டமைப்பு என பல துறைகளில் வடமாநிலங்களுக்கு முன் உதாரணமாக முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

அதற்கான விதைகளை விதைத்து, சுகாதாரத் துறையில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத சமூக நீதியுடன் கூடிய மருத்துவ சேவையை முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வழங்கி மருத்துவ படிப்பு, மருத்துவ சேவை ஆகிய இரண்டிலும் தனது ஆட்சிக் காலத்தில் சமூக நீதியை விட்டுக் கொடுக்காமல்,பிற்படுத்தப்பட்டவர்களுக்கு, மிகவும் பிற்படுத்தப்பட்டோர்களுக்கு,தாழ்த்தப்பட்டவர்களுக்கு என மருத்துவப் படிப்பில் இட ஒதுக்கீட்டை அதிகப்படுத்தியும்,

சென்னை தாம்பரத்தில் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்துக்கு அடித்தளம் அமைத்தும், தமிழ்நாடு முழுவதும் தரமான மருத்துவ சேவை வழங்கவும் அதற்கேற்றபடி தரமான மருத்துவர்களை அதிக எண்ணிக்கையில் உருவாக்கவும் மாவட்டம் தோறும் ஒரு அரசு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த அயராது பாடுபட்ட 24 மணி நேர மருத்துவ சேவை தந்து 104 கோடி சென்னையில் பொது மருத்துவமனைக்கு புதிய கட்டிடம் அமைத்து கர்ப்பிணி பெண்களுக்கு நிதி உதவி திட்டத்தை அறிமுகப்படுத்தி முதியோர்க்கு இலவச கண்ணொளி திட்டத்தை அறிமுகப்படுத்தி, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் மூலம் ஒரு குடும்பம் ஆண்டிற்கு ரூபாய் 5 லட்சம் வரை கட்டணம் இன்றி அங்கீகரிக் கப்பட்ட மருத்துவமனைகளில் சிகிச்சை பெற ஏற்பாடு செய்த தமிழகத்தின் சிற்பியாகவும்,சமூக நீதியின் காவலராகவும் விளங்கும் கழக முன்னாள் தலைவர் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பெயரை நெல்லை புதிய பல்நோக்கு உயர் சிறப்பு அரசு மருத்துவமனைக்குச் சூட்ட பல்வேறு தரப்பினரும் தென் மாவட்ட மக்களும் விரும்புகின்றனர்.

இவ்வாறு அவர் மனுவில் கூறியுள்ளார்.

அப்போது நெல்லை பேட்டை கிழக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் கோபி,மாநகர இளைஞரணி துணை அமைப்பாளர் அலீஃப் மீரான், மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், மாநகர மாணவரணி வினோத்குமார், மாநகர அயலக அணி துணை அமைப்பாளர் அந்தோணி ராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

### பொதுமக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தை

# தங்கள் தலைமை மேலும் வலுப்படுத்தட்டும்!

## ‘ஆம் ஆத்மி’ ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் பிறந்தநாளையொட்டி – முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஆக.17-**

**ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-**



ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் அவர்களுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள். தாங்கள் நல்ல உடல்நலத்தோடு நீண்ட காலம் மக்கள் சேவையாற்றி, வெற்றியைப் பெற வாழ்த்துகிறேன்.

பொதுமக்களின் உரிமைகளுக்கான போராட்டத்தைத் தங்கள் தலைமைத்துவம் மேலும் வலுப்படுத்தட்டும்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கீதாஜீவன் அறிக்கை!

தூத்துக்குடி,ஆக. 17-

தூத்துக்குடி வடக்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான பி.கீதாஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் நாளை (18.08.2025 - திங்கள் கிழமை) மாலை 6.00 மணி கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட அவைத்தலைவர் ஜிசெல்வராஜ், தலைமை வகிக்கிறார்.

இக்கூட்டத்தில் மாநில அணி துணை செயலாளர்கள்,

மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பி னர்கள், மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர்கழகச் செயலாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன்.

பொருள்:

1. 13.08.2025 கூட்டத்தில் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து.

2. கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் பி.கீதாஜீவன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.


